RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s2160

OPEN ACCESS

# புதுக்கவிதையில் மு. மேத்தா பங்களிப்பு

**கு. சக்திவேல்** [அ, *]

[அ] தமிழ்த்துறை, ஜெயலட்சுமி நாராயணசாமி கல்வியியல் கல்லூரி, தரமணி, சென்னை-600113, தமிழ்நாடு, இந்தியா.

# M. Mettha's contribution to Pudukavithai

**K. Sakthivel** [a, *]

[a] Department of Tamil, Jayalakshmi Narayanaswami College of Education, Tharamani, Chennai-600113. Tamil Nadu, India

* Corresponding Author: sakthivel2104@gmail.com

Received: 23-08-2022
Revised: 17-10-2022
Accepted: 29-10-2022
Published: 15-11-2022

**ABSTRACT**

The origins of Tamil Puthukavithai can be traced back to the poet Bharathiyar. It was his verse poem 'Kaatchi' that gave rise to the poetic form of "Pudukavithai". The name Pudukavithai came into vogue in the 60s. Prior to that, its' attempt to give free form to poetic form without being bound by Yaaapu methods was called "Vasanakavithai". Vallikannan later mentions, it had to bear names like "Yaapillaa Kavithai" "Ilagu Kavithai" Kattiladanga Kavithai". Mettha's books have attracted the hearts of the youth and have created a new record and history in book sales. Mettha's poems include politics, literature and art. His poems has good ideas. Themes of his poetry have been taken in Tamil short stories, novels and movies. M. Mettha, who combined the old and the new in metaphors has used simple rhetoric, simple style, high imagination and thus captured the people's hearts. He wrote many good short stories that express the sense of community. In the Golden Jubilee of Aanantha Vikatan (a Tamil language weekly magazine) his historical novel 'Chola Nila' won the prize in the competition. Despite working as a college professor, he is constantly engaged in writing too. Mettha's poems have the pride of making thousands of young poets to follow him, his poems concentrate on tapping the senses of readers, used simple rhetoric, natural style and its charm attracts the youth.

**Keywords:** Pudukavithai, Mettha, Tamil short stories, Yaapillaa Kavithai

## முன்னுரை

தேனி மாவட்டம், பெரியகுளம் என்ற ஊரில் முகமது பாபா - அமுதா பீவி தம்பதியினரின் மகனாகப் செப்டம்பர் 5, 1945ல் மு. மேத்தா பிறந்தார். இவர் பெரியகுளம் ஆரம்ப பாடசாலை விக்டோரியா நினைவு கழக உயர்நிலைப்பள்ளியில் கல்வி கற்க தொங்கினார். மதுரை தியாகராசர் கல்லூரியில் தமிழ் இலக்கியத்தில இளங்கலைப் படிப்பும், சென்னைப் பல்கலைக்கழகத்தில் முதுகலை பட்டமேற்படிப்பும் (தமிழ்) பயின்றார். சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ்ப்பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். புதுக்கவிதைக்கு ஏற்றம் தந்த கவிஞர்களுள் இவரும் ஒருவராவார். மேலும் வானம்பாடி என்ற புதுக்கவிதை ஏட்டின் வாயிலாக அறிமுகமான கவிஞர்களுள் மு. மேத்தாவும் ஒருவராவார்.

மு. மேத்தா தமிழ் புதுக்கவிதை வரலாற்றில் குறிப்பிடத்தக்க இடம் பெற்றுள்ளார். இவர் மரபுக் கவிதைகளையும் படைத்தளித்துள்ளார். மரபுக் கவிதைகளை எழுதி நல்ல பெயர் பெற்று சில

முத்திரைகளையும் பொறித்துவிட்டு புதுக்கவிதைத் துறைக்கு வந்து சிறப்பு பெற்றவர்களுள் மேத்தாவும் ஒருவர்.

கவிஞர் மு. மேத்தா இலக்கண மரபை நன்கு உணர்ந்தவர். ஆரம்பத்தில் இலக்கிய உலகிற்கு மரபுக்கவிதைகளின் மூலம்தான் அறிமுகமானார். இருப்பினும் இலக்கிய உலகம் அவரை இனங்கண்டது புதுக்கவிதைகளின் மூலமே என்ற கருத்து கவிஞர் மு. மேத்தா மரபுக் கவிதை உலகிலிருந்து புதுக்கவிதை உலபகிற்கு வந்தவர் என்பதை உணர்த்துகிறது. காதலின் மோகமும், தமிழின் தாகமும் மு. மேத்தாவைக் கவிஞராக்கியது.

மு. மேத்தா தமது பதினெட்டாம் வயதில் (1931) கன்னித் தமிழ்க்கவிஞர் என்னும் பட்டம் பெற்றவர். 1963 ம் ஆண்டு குறிஞ்சி இதழில் கன்னித்தமிழ் கவிஞர் என்ற பட்டத்தோடு இவரது முதல் கவிதை வெளியாயிற்று. இவரது "ஊர்வலம்" என்ற கவிதை நூலுக்கு 1972 ம் ஆண்டின் சிறந்த கவிதை நூல் என்ற பரிசைத் தமிழக அரசு நல்கியது (Metha, 2001).

முமேத்தாவின் ஆக்கப்படைப்புகள் வருங்கால கவிஞர்களுக்கு ஊக்கம் கொடுத்து வழி காட்டி நிற்கின்றன. கவிஞருக்கு அவரது இல்லமை கவிதை வடிக்க உறைவிடமாக இருந்தது.

புதுக்கவிதைக்கு அறிஞர் பெருமக்களிடமும், பத்திரிக்கைகளிடமும் பல்கலைக் கழகங்களிடமும் அங்கீகாரம் பெற்றுத்தந்தவர். முமேத்தா 1974 ல் வெளிவந்த கண்ணீர் பூக்கள் தொகுதி தமிழ்க் கவிதை உலகில் பெரும் சாதனை படைத்த நூலாகும். இந்நூல் 12 பதிப்புகள் வெளிவந்து 3000 பிரதிகள் விற்பனையாகி உள்ளது.

## புதுக்கவிதை வரலாற்றில் மு. மேத்தா

### மணிக்கொடிக்காலம்

1930 முதல் 1945 வரை உள்ள காலகட்டத்தை மணிக்கொடிக்காலம் என்பர். இக்காலக்கட்டத்தில் "புதுக்கவிதை என்னும் துளிர்விட பேருதவி புரிந்தவர் ந. பிச்சமூர்த்தியும் கு.பா. ராஜகோபாலனும் ஆவார். தமிழ் புதுக்கவிதையின் முன்னோடியாக திகழ்பவர் ந. பிச்சமூர்த்தி ஆவார். இவரது முயற்சிக்கு வால்ட் விட்மனின் 'புல்லின் இதழ்கள்' வித்திட்டது எனலாம். கு.பா. ராஜகோபாலனும் வல்லிக் கண்ணனும் இவருடன் சேர்ந்து கொண்டனர்.

இப்புதுக்கவிதைத் துறையை அயராது பேணிக் காலூன்றிச் செய்து காத்தவர் சி. சு செல்லப்பா ஆவார். ந. பிச்சமூர்த்தி மணிக்கொடி இதழில் முதன் முதலில் புதுக்கவிதை எழுதத்தொடங்கினார். இவர் தீட்டிய "காதல்" என்ற முதல்கவிதை 1934 ல் மணிக்கொடி இதழில் வெளியானது. அதனைத் தொடர்ந்து "ஒளியின் அழைப்பு" "கிளிக்குஞ்சு, "தீக்குழி" போன்ற தலைப்புகளில் பல கவிதைகளை எழுதினார் நபிச்சமூர்த்தி "பிஷி" என்ற புனைப் பெயரைப் புதுக்கவிதை எழுதுவதற்கு சூட்டிக்கொண்டார்.

ந. பிச்சமூர்த்தி "பூக்காரி" "வழித்துணை" கிளிக்கூண்டு" போன்ற கவிதைகளை எழுதியுள்ளார். ந. பிச்சமூர்த்தியின் காலக்கட்டத்தில் தான் கு.பா. ராஜகோபாலனும் புதுக்கவிதை முயற்சியில் ஈடுபட்டார். வசனக் கவிதையில் புதுக்கவிதையின் ஒளியும் ஒலியும் பாய்ச்சியவர், ஆண், பெண் உணர்வுகளை விரசமின்றி வித்தியாசமான முறையில் உளவியல் விமர்சனத்தோடு துல்லியமாகத் தரும் அருங்கவி. நாட்டுப்புறப்பாடற் பாங்கில் நெஞ்சை வசப்படுத்தும் புதிய அனுபவங்களை தந்தவர் கு.பா. ராஜகோபாலன் அவர்கள்.

வல்லிக் கண்ணன் புதுக்கவிதை துறையில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர். இவரது இயற்பெயர் கிருஷ்ணசாமி. இவர் நையாண்டிப் பாரதி என்னும் புனைப்பெயரில் 40 களில் கவிதை எழுதினார். அமர வேதனை இவரது புதுக்கவிதைத் தொகுப்பாகும். இவரது புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் என்ற நூல் "சாகித்திய அகாடமி" விருது பெற்றது.

புதுமைப்பித்தனும் புதுக்கவிதைத் துறையில் குறிப்பிடத்தக்கவர். இவரது இயற்பெயர் விருத்தாசலம். சிறுகதையில் எப்படி புதிய, புதிய உருவங்களைப் படைத்து பெருமையுடன்

விளங்கினாரோ, அப்படியே கவிதையிலும் புதுப்புது அமைப்பைத் தந்துள்ளார். இவர் மரபுக்கவிதையில் புதுமை பல புகுத்தியவர். புதுக்கவிதையில் போதிய மாற்றமும் போற்றத்தக்க ஏற்றமும் விளைவித்தவர். இவர்களின் கவிதை ஆர்வத்திற்கு வழி வகுத்துக்கொடுத்தது "மணிக்கொடி" இதழ்தான். இதனால் தமிழ்த்துறையில் புதிய மாறுதல் தொடங்கியது எனலாம்.

## சூறாவளி

1939 ஏப்ரலில் சூறாவளி என்ற இதழ் வெளிவந்தது. இதனை க.நா. சுப்பிரமணியன் நடத்தினார். இவர் "மயன்" என்ற பெயரில் இவ்விதழில் பல புதுக்கவிதைகளை அவ்வப்போது எழுதிவந்தார். ச.து.சு. யோகியாரின் படைப்புகள் எப்போதாவது கொண்டிருந்தது. புதுக்கவிதைக்கு எதிர்ப்புக்குரல் கொடுத்தவர்களின் கட்டுரைகளையும் இவ்விதழ் வெளியிட்டது குறிப்பிடத் தகுந்த ஒரு சிறப்பம்சமாகும்.

## கலா மோகினி

திருச்சியிலிருந்து 1942-ம் ஆண்டு கவிதைகளுக்கு முதலிடம் கொடுத்து இவ்விதழ் வெளிவந்தது. இதன் ஆசிரியர் வி.ரா. ராஜகோபாலன் அவர்கள். பிஷி, கு.பா. ராஜகோபாலன் போன்றோர் தங்கள் படைப்புக்களை இந்த இதழில் வெளியிட்டார்கள்.

## எழுத்துக்காலம்

1959 முதல் 1970 வரையிலான காலகட்டத்தை எழுத்துக்காலம் எனலாம். எழுத்து என்னும் இதழ் வழி புதுக்கவிதை படைத்தவர்கள் பலர். 1959 ஜனவரியில் எழுத்து பத்திரிக்கையை சி.சு. செல்லப்பா ஆரம்பித்தார். சி.சு. செல்லப்பா இவ்விதழின் ஆசிரியராக விளங்கினார். சி. மணிபசுவையா (சுந்தரராமசாமி) தருமு. சிவராமு, வைத்தீஸ்வரன், சண்முகசுப்பையா. நகுலன் (டி.கே. துரைசாமி) போன்றோர் எழுத்துக் காலக்கட்ட கவிஞர்கள் ஆவார். இவர்கள் வட சொற்களை அதிகம் கையாண்டனர். ந. பிச்சமூர்த்தியின் "பெட்டிக்கடை நாராயணன்" க.நா. சுப்பிரமணியனின் 'வானம்' ஆகியன எழுத்து பத்திரிக்கையில் இடம் பெற்ற சில புதுக் கவிதைகளாகும். கே. ராஜகோபால் எழுத்து இதழின் இறுதிக்காலத்தவர் ஆவார்.

## தாமரை

முற்போக்கு இலக்கிய இதழான தாமரையில் ப. ஜீவானந்தம் ஆரம்ப காலத்தில் ஆசிரியராக இருந்தவர். தொடக்க காலத்தில் இது புதுக்கவிதைக்கு இடம் தரவில்லை. பின்னாளில் புதுக்கவிதை தொடர்பான இது கட்டுரைகளையும் புதுக்கவிதைகளையும் வெளியிட்டது. பிறநாட்டு முற்போக்கு கவிஞர்களின் படைப்புகளை தமிழாக்கியும் பிரசுரித்தது. கால ஓட்டத்தில் இவ்விதழ் புதுக்கவிதைக்கு அதிகமான இடம் ஒதுக்கி முற்போக்குக் கவிஞர்கள் வளர துணை புரிந்துள்ளது.

## கசடதபற

1970 அக்டோபர் முதல் 1973 முடிய கசடதபற இதழ் வெளிவந்து நின்று விட்டது. இவ்விதழின் கவிஞர்களில் குறிப்பிடத்தக்கவர் ஞானக்கூத்தன். இவரது கவிதைகளில் இனிமையும் இயல்பான சொல்லோட்டமும், ஒலி நயமும் சிறப்பாக அமைந்திருக்கின்றது.

## வானம்பாடிக்காலம்

1971 - இல் வானம்பாடி தொழில் நகரமான கோவையில் தோன்றியது. 1970-க்குப் பிறகு "வானம்பாடி" எனும் இதழ் புதுக்கவிதை வளர்ச்சிக்குப் பெரிதும் துணை செய்திருக்கிறது. இவ்விதழில்

எழுதிய புதுக்கவிஞர்கள் சமுதாயத்தை உற்று நோக்கிப் படைப்புகளைத் தந்தனர். வானம்பாடி இயக்கம் பற்றி கைலாசபதி குறிப்பிடும்போது எதிர்கால நம்பிக்கை, கொள்கை, தெளிவு, தேசப்பற்று, நேர்மை, தமிழ் மரபுணர்ச்சி, எளிமை பொறுப்புணர்ச்சி, சமுதாய நேயம், கூட்டுறவு. மனோபாவம் முதலியன மூன்றாவது கால கட்டக் கவிஞர்களிடத்தில் காணப்படுகின்றன. எனத்துணிந்து கூறலாம் என்கிறார்" வாசுதேவன்.

புவியரசு, கங்கைகொண்டான், சிற்பி, பாலசுப்பிரமணியன், தமிழ்நாடன், அக்கினிப்புத்திரன், சக்திகனல், மு. மேத்தா, ரவிச்சந்திரன், ஞானி, மீரா, அ. ஜெயப்பிரகாசம், தமிழன்பன், பிரபஞ்சன், கோ. ராஜாராம் என்று தொடரும் பட்டியலைக் கொண்டது வானம்பாடி இயக்கம். வானம்பாடி இயக்கத்தினரில் ந. காமராசர், அப்துல்ரகுமான், மீரா, தமிழ்நாடன், மு. மேத்தா போன்றோர் மரபறிந்து புதுக்கவிதை எழுதிவந்தவர்கள் ஆவார்.

## பிற இதழ்கள்

மேற்கண்ட இதழ்கள் தவிர, வல்லிக்கண்ணன் துணை ஆசிரியராகப் பணியாற்றிய சினிமா உலகம், கிராம ஊழியன், சரஸ்வதி, தீபம், நடை திருவனந்தபுரத்திலிருந்து வந்த குருசேஷத்திரம் "நவஇந்தியா" "சிவாஜி" ஈழத்திலிருந்து வெளிவந்த 'மறுமலர்ச்சி பாரதி' 'ஈழகேசரி' ஆகிய இதழ்களும் அவ்வப்போது புதுக்கவிதைகளை வெளியிட்டன.

மரபறிந்து புதுக்கவிதை எழுதிவந்தவர்கள் இத்துறையில் அதிகமாகப் பேசப்படுகின்றனர். என்பதைப் புதுக்கவிதை வரலாற்றை ஒட்டு மொத்தமாக நோக்கும் போது உணர்ந்து கொள்ள முடிகிறது.

ந. பிச்சமூர்த்தி காலத்தில் ஒரு முயற்சியாகவும் சி.சு. செல்லப்பா காலத்தில் பரவலான வெளியீடுகளாகவும் அமைந்த புதுக்கவிதை வானம்பாடி காலத்தில்தான் அதன் உண்மையான சிறப்புத்தன்மைகளை எய்தியது. இன்று பலர் புதுக்கவிதைகளைப் படைத்த வண்ணம் உள்ளனர். அவர்களுள் சிற்பி, கந்தர்வன், அப்துல்ரகுமான், மு. மேத்தா, வைரமுத்து, பழநிபாரதி, பா. விஜய். கபிலன், ம. செல்வபாண்டியன், புவியரசு, முருகேசன் போன்றோர் குறிப்பிடத்தக்கவர் ஆவார்.

## வானம்பாடி அணியில் மு. மேத்தா

புதுக்கவிதையை இளைஞர் மத்தியில் கொண்டு சென்ற மு. மேத்தா வானம்பாடி அணியில் ஒருவராக விளங்கியவர். "வானம்பாடிக் கவிஞர்கள் அனைவரும் புரட்சிக் கருத்துக்களையும் பொதுவுடமைச் சிந்தனைகளையும், புதுக்கவிதை வாயிலாக வெளியிட்டார்கள்". இத்தகைய வானம்பாடி அணியில் ஒருவராக மு. மேத்தா விளங்கினார். மு. மேத்தா தாம் எழுதிய "அறிமுகம்" எனும் தலைப்பில் உள்ள கவிதையில் தன் அணியைக்

"கவிதை எம்கைவாள் என கர்ஜனை புரிந்து

வாளைச் சுழுற்றிய வானம் பாடிகள்"

என்று அறிமுகம் செய்கிறார்.

## மு. மேத்தாவின் படைப்புகள்

### மேத்தாவின் கவிதைகள்

1.கண்ணீர் பூக்கள், 2. ஊர்வலம் (தமிழக அரசின் முதல் பரிசு பெற்றது), 3.மனச்சிறகு (1978), 4.அவர்கள்வருகிறார்கள் (1980), 5.முகத்துக்கு முகம் (1981), 6. நடந்த நாடகங்கள் (1982), 7.காத்திருந்த காற்று (1982), 8. ஒரு வானம் இரு சிறகு (1983), 9.திருவிழாவில் தெருப்பாடகன் (1984), 10. நந்தவனநாட்கள் (1985), 11.இதயத்தில் நாற்காலி (1985), 12. என்னுடையபோதிமரங்கள் (1987),

13.கனவுக்குதிரைகள் (1992), 14.கம்பன் கவியரங்கில் (1993), 15.என் பிள்ளைத் தமிழ் (1994), 16. ஒற்றைத் தீக்குச்சி (1997), 17. மனிதனைத்தேடி (1998), 18.ஆகாயத்துக்கு அடுத்த வீடு (2004), 19.மு.மேத்தா கவிதைகள் (2007), 20.கலைஞருக்கும் தமிழ் என்று பேர் (2010), 21.கனவுகளின்கையெழுத்து (2016), 22. நாயகம் ஒரு காவியம் (இறுதி படைப்பு) போன்ற கவிதை நூல் எழுதியவர் என்ற பெருமைக்கு உரியவராக மு.மேத்தா திகழ்கிறார் (Metha, 1985; Metha, 1989).

## கவிஞர்கள் பார்வையில் மு. மேத்தா

இந்த தேசமெங்கும் மேத்தாவின் கவிதைகள் புன்னகைத்துக் கொண்டிருக்கின்றன. இத்தனை பெரிய வெற்றியை நண்பர் மேத்தா அடைந்திருப்பது கவிதைகளால் மட்டும் தான் என்பதை அறியலாம். இங்கே பலரும் உருவங்களில் மட்டும் மனிதர்களாக உலா வரும்போது மேத்தா உள்ளத்தாலும் மனிதராகவே இந்த வீதியில் ஊர்வலம் வருகிறார். நாற்காலிகளை இவர் நாடிப் போனதில்லை. அனைத்து இளைஞர்களின் உள்ளங்கள் எல்லாம் இவருக்கு சிம்மாசனம்தான் என்று இரா. வேலுச்சாமி காத்திருந்த காற்று என்ற நூலுக்கு எழுதியுள்ள அணிந்துரையில் குறிப்பிட்டுள்ளார்.

மு. மேத்தாவைப் பற்றி கவிஞர் அறிவுமணி கூறும்போது, “மு. மேத்தாவின் காலம் கவிதைகளின் பொற்காலமாகும். அவரது பேனா செங்கோல் தாழ்ந்திருந்ததே இல்லை. புதுக்கவிதை குதிரைகளை சாரட்டு ஒட்டிய ஒருவர். சோழநிலா பார்த்து வாரம் ஒருமுறை வா வா என்று அழைத்தார்கள் மக்கள். பல புத்தகப் படையெடுப்புகளால் தமிழ் மனங்களில் கொடியேற்றினார்” என்று கூறுகிறார்.

“எரிமலைப் பாறைகளிலும் இதய ஓரங்களிலும் பேனா முனையால் பெயர் பொறித்திடும் அற்புதக் கவிஞர் மு. மேத்தா. தாகம் கொண்ட மோக வண்டுகள் மொய்த்திடுவதற்கு நந்தவனத்திற்கு அழைத்துச் சென்றவர்” என்று மேத்தாவின் சிறப்புகளை காதல் மதி கூறுகின்றார்.

மேத்தா பற்றி பாலா குறிப்பிடும்போது கண்ணீர் பூக்கள் என்ற நூலின் மூலம் பரவலாக அறிய பெற்றவர் மு. மேத்தா. காதலும் சோகமும் இழையோடும் மேத்தாவின் கவிதைகளுக்கு அவ்வப்போது கூர்மையான விமர்சனங்களும் இறங்குவதுண்டு” என்று கூறுகின்றார். ”வானம்பாடி இயக்கத்தில்” வந்த திறமையானவர்களில் முமேத்தாவும் ஒருவர் என மதிப்பிடுகிறார் பாலா (Bala, 1981).

மேத்தாவின் ஆற்றலை வெளிப்படுத்துவன் அவரது கவிதைகள். வேதனைகளை ஆற்றிக்கொள்ளும் உணர்வையும் இயல்பாக எழுதுபவர் மு. மேத்தா, அவரைப்பற்றி கவிஞர் மதுரை இளங்கவின் கூறுகையில் "தமிழகத்து இளைஞர்களின் இதய சிம்மாசனத்தில் கோலோச்சி அமர்ந்திருக்கும் கவிஞர் மு. மேத்தா பழமையை அழிக்க வந்தவரல்ல பழமையில் புதுமையை ஊற்றி மணக்க வைத்தவர்" என்கிறார்.

கவிஞர் கண்ணதாசன் கண்ணிர்ப்பூக்கள் என்ற நூலில் மு. மேத்தாவைப் பற்றிக் கூறும்போது 'வாழும் உலகோடு உறவு கொள்ளாத எந்தக் கலையும் மகத்தானதில்லை என்று ஜெரோம் கூறிய உண்மையைப் புரிந்து கொண்டு எழுதிய மேத்தாவைப் போன்ற கலைஞர்கள் தமிழ் புதுக்கவிதையை வளர்ச்சியில் செலுத்துபவர்கள்" என்கிறார். மேத்தா கையாலும் உண்மைகளில் உருவகங்களில், பழமையும் புதுமையும் இணைந்து மணம் பரப்புகின்றன. இச்சங்கத்தில் கவித்துவம் களிநடனம் புரிகின்றது" என்கிறார் ச. ஜெயப்பிரகாசம்.

## முடிவுரை

இவரது முதற் கவிதைத்தொகுப்பு கண்ணீர்ப் பூக்கள். காதல் சோகமும், தமிழ்த் தாகமும் இழையோடும் அவரது கவிதைகள் அவ்வப்போது கூர்மையான சமூக விமர்சனங்களிலும் இறங்குவதுண்டு. சமூக விமர்சனத் தொனியில் அமைந்த "தேச பிதாவுக்கு ஒரு தெருப் பாடகனின் அஞ்சலி" என்ற கவிதை மு. மேத்தாவுக்கு புகழ் தேடித் தந்த கவிதை ஆகும். மரபுக்கவிதைகள், புதுக்கவிதைகள், சிறுகதை, நாவல், கட்டுரைகள் முதலியவற்றைப் படைப்பதிலும் வல்லவரான மு.

மேத்தா அத்துறைகளில் பதினைந்திற்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளார். அவருடைய நூல்களுள் "ஊர்வலம்" தமிழக அரசின் முதற்பரிசினைப் பெற்ற கவிதை நூலாகும். இவரது "சோழ நிலா" என்னும் வரலாற்று நாவல் ஆனந்த விகடன் இதழ் நிகழ்த்திய பொன்விழா இலக்கியப் போட்டியில் முதல் பரிசு பெற்றது ஆகும். இவர் திரைப்படத் துறையிலும் பாடல்கள் எழுதி வருகிறார். மு. மேத்தாவின் கண்ணீர் பூக்கள் என்ற கவிதை நூல் பல்கலைக்கழகங்களிலும், தன்னாட்சி கல்லூரிகளிலும் இளங்கலை மற்றும் முதுகலை வகுப்புகளுக்கு பாடத்திட்டமாக வைத்து பாடநூலாக படிக்கப்பட்டு வருகிறது. இது மேத்தாவிற்கு பெருமை சேர்க்கும் ஒன்றாகும். ஆய்வாளர்களுக்கு மு. மேத்தாவின் நூல்கள் இன்றளவிலும் ஆய்விற்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## References

Bala, (1981) Pudhukavithai Oor Parvai, Agaram Veliyedu, Sivagangai, India

Metha, M. (1985) Nanthavana Natakal, Thirumagal Nilayam, Chennai, India

Metha, M. (1989) Kathirintha Katru, Narmatha Pathippagam, Chennai, India

Metha, M. (2001) Oorvalam, Thirumagal Nilayam, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License